# தினமலர் (28.08.2023)



புகழூர் நகராட்சி நிர்வாக திட்டப்பணிகள் பயன்பாட்டிற்காக புகழூர் காகித ஆலை சார்பில் ரூ.30 லட்சத்திற்கான காசோலையை நகராட்சி தலைவர் குணசேகரனிடம் அதன் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர்(மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் வழங்கினர்.

# திட்டப்பணிகளுக்கு காசோலை வழங்கியது காகித ஆலை

**வேலாயுதம் பாளையம், ஆக. 28–**

புகளூர் செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (சிஎஸ்ஆர் பண்ட்) கீழ் புகழூர் நகராட்சி நிர்வாக திட்டப்பணிகள் பயன்பாட்டிற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

புகழூர் நகராட்சி தலைவர் குணசேகரன் மற்றும் ஆணையர் பால்ராஜ் ஆகியோரிடம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச் செல்வன், முதுநிலை மேலா ளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சத்திற்கான காசோலையை வழங்கினர்.

தினமணி (28.08.2023)

# புகழூர் நகராட்சி திட்டப் பணிக்கு டிஎன்பிஎல் ரூ.30 லட்சம் நிதியுதவி



புகழூர் நகராட்சித் தலைவர் குணசேகரனிடம் நிதிக்கான காசோலையை ஞாயிற்றுக்கிழமை வழங்கிய காகித ஆலையின் செயல் இயக்குநர் சீனிவாசன். உடன் ஆலைப் பொது மேலாளர் கலைச்செல்வன், (முதுநிலை மேலாளர் சிவக்குமார்) உள்ளிட்டோர்.

**கரூர், ஆக. 27:** புகழூர் நகராட்சி திட்டப்பணிக்கு டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில் ரூ.30 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலை நிறுவனத்தின் சமூக பொறுப்புடைமைச்செயல்பாடுகளின் (சிஎஸ்ஆர் பண்ட்) கீழ் புகழூர் நகராட்சியின் நிர்வாக திட்டப் பணிகள் பயன்பாட்டுக்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் , முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் புகழூர் நகர்மன்றத் தலைவர் சேகர் என்கிற குணசேகரன் மற்றும் நகராட்சி ஆணையர் பால்ராஜ் ஆகியோரிடம் ரூ. 30 லட்சத்திற்கான காசோலையை வழங்கினர். நிகழ்ச்சியில் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் வள்ளிராஜ், நகராட்சி நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தினத்தந்தி (28.08.2023)**



### காகித ஆலை சார்பில்

# புகழூர் நகராட்சிக்கு ரூ.30 லட்சம் வழங்கல்

நொய்யல், ஆக.28-

புகழூர் காகித ஆலை நிறுவனத்தின் சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (சி.எஸ்.ஆர்.பண்ட்) கீழ் புகழூர் நகராட்சி நிர்வாக திட்ட பணிகள் பயன்பாட்டிற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு, ரூ.30 லட்சத்திற்கான காசோலையை புகழூர் நகர்மன்ற தலைவர் சேகர் என்கிற குணசேகரன், நகராட்சி ஆணையர் பால்ராஜ் ஆகியோரிடம் வழங்கினர். அப்போது, நகராட்சி துப்புரவு ஆய்வாளர் வள்ளிராஜ், நகராட்சி நிர்வாக அலுவலர்கள் உடனிருந்தனர்.